JMC-N

விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 13 புதன்கிழமை (27.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்குமாறு ரணிலுக்கு இணைத்தலைமை அழுத்தம்

## இனப்பிரச்சினையை தேசியப் பிரச்சினையாகக் கருதுமாறும் அறிவுரை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்காக சர்வ கட்சி மாநாட்டில் பங்கு பற்றுமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளன. (06 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுறுத்தல் காரணமாக ஐ.நா. அதிகாரி வெளியேற்றம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள்சபையின் அலுவலக நிதித் திட்ட அதிகாரி வாசுகி மகேந்திரன் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையிலிருந்து குடும்பத்தினருடன் வெளியேறியுள்ளார்.

தான் வெளியேறுவதற்கு முன்பாக கடத்தல்கள் தொடர்பான மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளரும் மேலக மக்கள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலிருந்து கொண்டுவரப்பட்ட கிளைமோர் ராஜகிரியில் மீட்கப்பட்டதாம்

(கொழும்பு)

பொதுமகன் ஒருவர் வழங்கிய இரகசியத் தகவலொன்றையடுத்து 20 கிலோக்கிராம் நிறைகொண்ட அதி சக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டொன்றை நேற்றுப் பிற்பகல் பொரல்லைப் பொலிஸார் மீட்டதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் டபிள்கப் வாகனத்தின் டீசல் தாங்கிக்குள் மறைக்கப்பட்டு கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு இக் கிளைமோர் கடத்தி வரப்பட்டுள்ளதாகப் பொரல்லைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வாகனத்தில் இருந்து டீசல் தாங்கி அகற்றப்பட்டதைக் கண்ட பொதுமகன் ஒருவருக்கு சந்தேகம் ஏற்படவே அவர் 119 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் ராஜகிரிய ஒபயசேகரபுர என்ற இடத்தில் உள்ள வீடொன்றின் பின்புறமாகப் புதைக்கப்பட்டிருந்த இக் கிளைமோரை நேற்றுப் பிற்பகல் 12.30 (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர்த் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் முழங்காவில் பகுதியில் படையினரின் ஆழஊடுருவும் அணியினரால் கிளைமோர்த் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 8.30 மணியளவில் மரமொன்றில் பொருத்தி வைக்கப்பட்ட கிளைமோர் வாகனம் ஒன்றை இலக்கு வைத்து வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

கிளைமோரில் சிக்கிய வாகனம் பெரும் சேதமடைந்ததோடு வாகன சாரதி மயிரிழையில் உயிர் பிழைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன்தொழில் பயிற்சி நெறியொன்றை பயில்வதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2008 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்களைக் கல்வி அமைச்சுக் கோரியுள்ளது. தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டு கால சேவை முன்தொழிற் பயிற்சி ஒன்றை பயில்வதற்குத் தேவையான கல்வித் தகைமையும் தகுதிகளுமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்தே இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இம்முறை மொத்தம் 24 பாட நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு நாளை மறுதினம் வெளியாகவுள்ள வர்த்தமானிப் பத்திரிகையை இன்று முதல் வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம். (ந-5)

## ஊரடங்குச் சட்டம் நேரம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள இரவு நேரப் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அரை மணி நேரத்தால் தளர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை இரவு7 மணிமுதல் அதிகாலை 5 மணிவரை அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இரவு 7 மணிமுதல் அதிகாலை 4.30 மணிவரை அமுல்படுத்தப்படும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ந-5)

## சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்பிற்கு

## புலிகளின் படகுகளில்

கப்படுகின்றது. (ந-5) | சேவை முன்தொழிற் பயிற்சி ஒன்றை பயில | பார்வையிடலாம். (ந-5)

## சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்பிற்கு இராணுவத்தின் அனுமதி தேவை

### யாழ்.ரெலிக்கொம் வட்டாரம் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா ரெலிக்கொம் சிற்றி லிங் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்பைப் பெற இராணுவத்தினரின் அனுமதி பெறப்பட வேண்டும் என ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ அனுமதிப் பத்திரம் பெற்ற பின்னரே சிறிலங்கா ரெலிக்கொம் சி.டி.எம்.ஏ. இணைப்பை வழங்க முடியும். இவ் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான படிவத்தை சிறிலங்கா ரெலிக்கொம்மில் பெற்று கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலரிடம் உறுதி செய்த பின்னர் அருகிலுள்ள இராணுவ முகாம் (06 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் படகுகளில் யப்பானிய ராடர்கள்

### கொழும்பு ஊடகம் தகவல்


(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் படகில் யப்பானியத் தயாரிப்பு ராடர் மற்றும் சீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியாகியுள்ள செய்தியில், விடுதலைப்புலிகள் சீனத் தயாரிப்பு இராணுவத் தளபாடங்களைப் பயன்படுத்துவது குறித்துப் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் ராடர்கள் உள்ளிட்ட யப்பானியத் தளபாடங்களைப் போராளிகள் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

# ரணில்-மங்கள இவ்வாரத்திற்குள் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு

## அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்ப நடவடிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆளும் கட்சி தரப்பிலிருந்து எதிர்க்கட்சிக்கு மாறிய முன்னாள் அமைச்சர் களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சிக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இவ் வாரத்திற்குள் இடம்பெறவுள்ளது.

இவர்களுக்கிடையிலான இந்த முக்கியசந்திப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கைக்குத் திரும்பும் முன்னார் இடம் பெற விருப்பதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் இடையில் இடம்பெறவிருக்கின்ற இந்தப் பேச்சுவார்த்தையில் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள், இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகத்தின் பார்வை மற்றும் கூட்டமைப்பு நிறுவுவது தொடர்பாக விரிவாக ஆராயவுள்ள (06 ஆம் பக்கம் பார்க்க)



# இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட முடியாது

## பாகிஸ்தான் தூதுவர் கருத்து

(கொழும்பு)

இலங்கையின் உள் விவகாரங்களுக்கு தீர்வுகாண வெளிநாடுகள் தலையிட முடியாது என்று இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சகாத் ஏ.சௌத்திரி தெரிவித்துள்ளார். கொழும்பில் ஊடகவியலாளர்களுக்காக நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசியதாவது;

உள்நாட்டுப் பிரச்சினையை அரசு தீர்ப்பதற்கு நாம் அனுமதிக்கவேண்டும். பாகிஸ்தான், இந்தியா,நோர்வே போன்ற நாடுகள் என்றாலும் அவர்களின் உள் விவகாரங்களில் வெளியார் தலையிடக்கூடாது. தற்போது இலங்கைக்கு உலகில் முழு உரிமைகளும் வழங்கப்படவில்லை போன்ற தோற்றப்பாட்டையே நாம் அவதானித்துள்ளோம்.

நடைபெற்று வரும் மோதல்களை தீர்ப்பதன் மூலம் உலகத்தின் அதிக உரிமைகளைக் கொண்ட இடத்தைப்பிடிப்பதற்கு இலங்கை போராடவேண்டும்.தனக்கு எது நல்லது என்பதை இலங்கை அரசே தீர்மானிக்க முடியும்.

எனவே பாகிஸ்தான்,இந்தியா,நோர்வே போன்ற நாடுகள் ஏன் அதன் உள்விவகாரங்களில் தலையிடவேண்டும்.இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஊடகங்கள் அதிக பங்கு வகிக்கமுடியும். ஏனெனில் சமூகங்களுக்கிடையில் அவை தொடர்பாடல்களை ஏற்படுத்தும் கருவியாக தொழில்படமுடியும்.

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களை மையப்படுத்தி அல்லது தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராக தான் பாகிஸ்தான்–இலங்கை உறவு உள்ளதாக ஊடகங்கள் குறிப்பாக தமிழ் ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

ஆனால் நாம் இலங்கையில் உள்ள ஒரு சமூகத்தை சார்ந்து உறவைப்பேணவில்லை. அதனை ஒரு நாடாகக் கருதியே உறவுகளை பேணுகின்றோம் என்றார் அவர். (ந-5)

## வெடிகுண்டு விவகாரம் மூன்று பொலிஸார் கைது

ஆயிரம் கிலோ வெடிகுண்டுகளுடன் ஊடுருவிய பார ஊர்தியை அனுமதித்ததாக பூண்டுலோயா பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.கொழும்பு தலைமை நீதிபதி குசல் சரோ ஜனி வீரவர்த்தனவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூண்டுலோயா பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பத் பண்டார, ஜயலத் ஏக்கநாயக்க,சந்திரசேன ராஜகருண ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஆயிரம் கிலோ வெடிகுண்டுகளுடன் வந்த லொறியை எப்படி சோதனையிடாமல் அனுமதித்தனர் என்று அவர்களிடம் விசாரணை நடாத்தப்படுவதாகவும் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ந-5)

# புற்று நோயை அழிக்க தங்கக் குண்டுகள் சிகிச்சை

(லண்டன்)

புற்று நோயை அழிக்க தங்கம் பூசப்பட்ட நுண்ணிய குண்டுகள் பயன்படுத்தப்பட்டு மேற்கொண்ட சோதனைகள் வெற்றி பெற்றுள்ளன. விரைவில் மனிதர்களின் உடலில் இந்த குண்டுகள் பரிசோதிக்கப்படவுள்ளன.

புற்று நோயை குணப்படுத்த அறுவை சிகிச்சைகள் மற்றும் கதிர் வீச்சு சிகிச்சைகள் தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது புதிய தொழில்நுட்பம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இரத்தக்குழாய்களிலுள்ள அடைப்புக்களை நீக்க அஞ்சியோ பிளாஸ்டி முறையில் சிகிச்சை நடத்தப்படுவது போல புற்றுநோயையும் தங்கம் பூசப்பட்ட குண்டுகள் மூலம் முழுவதுமாக அழிக்கும் சோதனை வெற்றி பெற்றுள்ளது.

பிரிட்டன் மற்றும் அமெரிக்க நிபுணர்கள் இச் சோதனையில் வெற்றி பெற்றுள்ளனர். டெக்சாசில் உள்ள ரைஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜெனீபர் வெஸ்ட் இப் பரிசோதனையில் உதவி வருகிறார்.எலிகளில் நடாத்தப்பட்ட சோதனை வெற்றி பெற்றுள்ளது.

பெருங்குடல் புற்றுநோய் உள்ள 9 எலிகளிடம் இச் சோதனை நடாத்தப்பட்டது. சோதனையில் புற்றுநோய் முழுவதுமாக அகற்றப்பட்டு வெற்றி பெற்றது. மிக நுண்ணிய ஒருவகை கண்ணாடிக் குண்டுகளில் தங்கம் பூசப்பட்டு அது உடலுக்குள் செலுத்தப்படுகிறது.

புற்று நோய் தாக்கிய பகுதிக்கு அவை கொண்டு செல்லப்படுகின்றன. புற்றுநோய் தாக்கிய பகுதிக்கு தங்கக் குண்டுகள் வந்ததும் அவற்றை குறைந்த கதிர் வீச்சு சக்தி கொண்ட ஒளிமூலம் டாக்டர்கள் இயங்கச் செய்கின்றனர்.

தங்கக்குண்டுகள் வெடித்து புற்று நோய் கட்டிகளை முழுமையாக அகற்றி விடுகின்றன. இந்த தங்கக் குண்டு வெடிப்பு சோதனை மனிதர்களிடம் விரைவில் பரிசோதிக்கப்படவுள்ளது.

அந்தச் சோதனை வெற்றி பெற்றால் எல்லா விதமான புற்று நோய்க்கும் இந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தலாம். இடுப்பு எலும்பு புற்று நோய்,மார்பகப் புற்று நோய்,மூளை புற்று நோய்கட்டி,கழுத்துப் புற்று நோய் போன்ற அனைத்தையும் குணப்படுத்தலாம்.

இம் முறையின் மூலம் அழிக்கப்படும் சிகிச்சைக்கு மிகவும் குறைவாகவே செலவு ஏற்படும்.அத்துடன் பக்க விளைவுகளும் பெரிதும் குறைவாக இருக்கும்.

மரணத்தை வெல்லும் இச் சத்திர சிகிச்சை முறையை பிரிட்டன் டாக்டர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.இது நடைமுறைக்கு வந்தால் புற்று நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும். (ந-5)

## ஓட்டமாவடியில் முஸ்லிம் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை ஓட்டமாவடியில் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் நூர் மொகமெட் கபூல் (வயது 26) சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். வாழைச்சேனை கியாத் மகூதியைச் சேர்ந்த கபூல் ஒரு பிள்ளையின் தந்தையாவார். ஓட்டமாவடி புகையிரத வீதியில் கபூலை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.45 மணியள வில் பின் தொடர்ந்து வந்த அடையாளம் தெரியாத ஆயுதக்குழுவினர் சுட்டுக்கொன்ற னர்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கபூல் எட்டு நாட்களுக்கு முன் பாகத்தான் நீதிமன்றப் பிணையில் வெளிவந்திருந்தார் என்றும் தெரியவருகிறது. (ந-5)

# மூன்று மாதங்களுக்குள் கிழக்கிலிருந்து புலிகளை முழுமையாக விரட்டியடிப்போம்

## அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே சூளுரை

(கொழும்பு)

மூன்று மாதங்களுக்குள் கிழக்கிலிருந்து விடுதலைப்புலிகளை முழுமையாக விரட்டியடிப்போம் என்று தேசத்தினை கட்டியெழுப்பும் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்தார்.அண்மையில் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்கூறியதாவது, ஒருவருடத்துக்கு முன்னர் விடுதலைப்புலிகள் மாவிலாறு அணைக்கட்டினை மூடியிருந்தார்கள். அதனை எமது ஜனாதிபதியின் கண்காணிப்பில் அரச படையினர் கைப்பற்றி அந்த அணைக்கட்டினை புனருத்தாரணம் செய்தோம்.

இதனால் தமிழ், முஸ்லிம் விவசாயிகளுக்கு தீர்வு வழங்கினோம். அதேபோல் இன்று கிழக்குப் பிராந்தியத்தில் சகல இராணுவ தரப்பினரையும் பயன்படுத்தி மூன்று மாதங்களுக்குள் புலிகளை கிழக்கிலிருந்து விரட்டியடிப்போம்.

பொதுமக்களின் பொருளாதார வாழ்வுக்கு முன்னுரிமை வழங்குவோம்.இப்போது மட்டு., திருமலை மாவட்டங்களில் ஜனாதிபதி உண்மையான யுத்தத்தினை செய்து வருகிறார்.

புலிகளின் கேந்திர நிலையமான தொப்பிகல காட்டினுள் எமது அரச படையினர் 20 கிலோ மீற்றர் தூரத்தினைக் கைப்பற்றியுள்ளனர். தொடர்ச்சியாக முன்னேறி பூரணத்துவமாக கைப்பற்றுவர்.

ஜனாதிபதியின் உண்மையான யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழ்பவர்களின் அத்தியாவசிய வாழ்வாதார மீளக்குடியமர்த்தல் போன்ற சேவைகளினை துரிகதியில் செய்து வருகின்றோம் என்றார். (ந-5)

# மடுத்திருவிழாவையொட்டி தற்காலிக யுத்தநிறுத்தம் செய்க!

## மடு தேவாலயம் வேண்டுகோள்

(மன்னார்)

மன்னார் மடு திருவிழாவையொட்டி தற்காலிக யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு அரசு மற்றும் விடுதலைப்புலிகளிடம் மன்னார் கத்தோலிக்க தேவாலயம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கத்தோலிக்க தேவாலயப் பேச்சாளர் கூறியுள்ளதாவது,எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி மடு தேவாலயத் திருவிழா நடைபெறவுள்ளது.

இத் திருவிழாவில் பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து தருமாறு அதிகாரிகளிடம் கேட்டுள்ளோம். தற்காலிக யுத்த நிறுத்தத்தை கடைபிடித்து அமைதியை ஏற்படுத்தவேண்டும் என்று விரும்புகிறோம்.

வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளரும் அக் கட்சியின் பிரதிச் செயலாளருமான ஜயலத் ஜயவர்த்தன கூறுகையில், அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தற்காலிக யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்க அனைத்துச் செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்த வேண்டும் என்றார். (ந-5)


**புறொயிலர் உயிர்க் கோழி இறைச்சி விற்பனைக்கு உண்டு**

புறொயிலர் உயிர் இறைச் சிக் கோழி, கல்பேட் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: NEW R.S.K FARM மான் பாடசாலை வீதி, உடுவில். (138)



காரைநகர் – புகலி

**சிவசுப்பிரமணிய ஆலய அலங்கார உற்சவம் -2007**

**7 ஆம் நாள் உற்சவம்**



நிகழும் சர்வசித்து வருடம் ஆனித் திங்கள் 13ஆம் நாள் (27.06.2007) இன்று புதன் கிழமை 7- வது நாளாக அலங்கார உற்சவம் தொடர முருகன்திருவருள் கைகூடியுள்ளது.

காலை 8.00 மணிக்கு அபிஷேகம்
11.30 மணிக்கு விசேட பூசை
மாலை 4.00மணிக்கு அபிஷேகம்
மாலை 5.30 மணிக்கு கலை நிகழ்ச்சி
(சிவகாமி அம்பாள் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்கள்)
7.00மணிக்கு வசந்த மண்டப பூசை

29.06.2007 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்கு முருகப்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

30.06.2007 சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு தீர்த்தோற்சவம்

உற்சவகுருக்கள்:-சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்

உற்சவ காலங்களில் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

சுபம்

ஆலய பரிபாலன சபையினர்

புகலி சிவசுப்பிரமணிய கோவில்,
காரைநகர்.

(C-177)



**SATS-TECH Satellite System**




நேரடியாக செய்மதி மூலம் சண் ரீவி,சண் நியூஸ்,ஜெயா ரீவி,பொதிகை உட்பட 40ற்கும் மேற்பட்ட சானல்களை இடையூறு இன்றி DVD தரத்துடன் கண்டு களிக்கக்கூடிய (Digital dish Antenna System) சிஸ்டம், ஒரு வருட விற்பனைக்கு பிந்திய சேர்விஸ் உத்தரவாதத்துடன் நம்ப முடியாத விலையில்!!!

KU band System
Rs.8000/= தொடக்கம்
Rs.17000/= வரை

C Band System
Rs.16500/= தொடக்கம்
Rs.25000/= வரை

C & KU,Multi System
Rs.18000/= தொடக்கம்
Rs.26000/= வரை

- ★ நேரடி இறக்குமதியாளர்கள், குடாநாட்டில் 1000ற்கும் மேற்பட்ட சிஸ்டங்களை விற்பனை செய்துள்ளோம்.
- ★ TRCSL ன் அங்கிகரிக்கப்பட்ட விற்பனை நிலையம் (செய்மதி தொலைக்காட்சி உபகரணங்கள் விற்பனை இணைப்பு உட்பட)
- ★ இலவச தொழில்நுட்ப ஆலோசனைகள் (Dish Antenna மற்றும் கேபிள் ரீவி சம்பந்தமாக)
- ★ 20 வருட அனுபவம் (செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் ரீவி Analog and Digital)
- ★ அனைத்து கேபிள் ரீவி உபகரணங்களும் குறைந்த விலையில்
- ★ மொத்தக் கொள்வனவிற்குச் சிறப்பான தள்ளுபடி.

மேலதிக விபரங்களுக்கு:-
சாட்ஸ் டெக் இன்ஜினியர்ஸ்
இல.182, கே.கே.எஸ்.வீதி (குளப்பிட்டி சேச் அருகாமை)
குளப்பிட்டி, கொக்குவில்.

Phone :-021 222 5908
Hot Line :- 077 7710785

(c-191)

# அத்தியாவசிய பொருட்கள் பத்தின் வற்வரி நீக்கம்

மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பத்து அத்தியாவசியப் பொருட்களுக்கான வற்வரியை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்தியொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், பருப்பு, சீனி, சின்ன வெங்காயம், மிளகாய், ரீன் மீன், கடலை, பாசிப்பயறு மற்றும் நெத்தலி ஆகியனவற்றிற்கான வற் வரியை நீக்குவதனால் தற்போதைய விலைகளை விட குறைந்த விலைகளில் பாவனையாளர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அத்தியாவசியப் உணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

மீன், பால்மா மற்றும் இறக்குமதி செய்யப்படும் ஏனைய பொருட்கள் என்பவற்றின் விலைகளை பாவனையாளர்கள் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் ஒரே நிலையில் வைத்திருப்பது இங்கு ஆராயப்பட்டது. இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இறக்குமதி செய்யப்படுகின்ற அத்தியாவசிய பொருட்கள் அனைத்திற்கும் அறவிடப்பட்டு வந்த சகல வரிகளையும் எதிர்வரும் காலங்களில் சுங்கத் தீர்வை மூலம் அற விட சட்ட விதிகளை வகுப்பதற்கும் ஜனாதிபதி இக் கூட்டத்தின் போது இணக்கம் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, சி.பி.ரத்நாயக்க, பீலிக்ஸ் பெரேரா, பந்துல குணவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்ட தாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ந-5)

# தமிழீழத்திற்கு மாற்றீடாக வேறு எத்தகைய தீர்வையும் விடுதலைப்புலிக்கள் ஏற்கமாட்டார்கள்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

விடுதலைப்புலிகள் தமிழீழத்திற்கு மாற்றீடாக வேறு ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை என்பதை அவர்ளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது அறிந்து கொண்டதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள பிராந்திய அரசே தமிழ் மக்களுக்கு சிறந்த தீர்வாக அமைய முடியும் என்பதுடன் தமிழ் மக்களுக்கு இதனை வழங்கும் போது இந்தியாவும் அதை விட அதிகமாக வழங்குமாறு இலங்கையைக் கோரப்போதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனாலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்றத்தில் தீர்வுயோசனைகளை முன்வைத்தபோது வாக்கெடுப்பில் தாம் கலந்துகொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு கோரியவர்களுக்கு கிராமத்தை அல்லது மாவட்ட அதிகாரத்தை வழங்குவது எந்த விதத்தில் நியாயம் என்று ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கேள்வி எழுப்பினார்.

ஸ்ரீ.ல.முஸ்லிம் மீடியா போரத்தின் 13 ஆவது வருடாந்த மாநாடு அதன் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் ஹோட்டல் ரண்முத்துவில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அண்மையில் கொழும்பின் விடுதிகளில் இருந்து தமிழர்கள் வவுனியாவுக்கு பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டனர். நாட்டில் நிலவும் யுத்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் தவறு கிடையாது என்று எனது நிலைப்பாட்டை அப்போது வெளியிட்டிருந்தேன். இன்றும் அதையே மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

எதையும் அடக்கி வாசிக்கவேண்டிய தேவை எனக்கு இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்தும் மன்னாரில் இருந்தும் இரு மணி நேர அவகாசத்தில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது எவரும் மன்னிப்புக்கோர முன்வரவில்லை.

இன்றும் அம் மக்கள் புத்தளத்தில் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியிலேயே வாழ்க்கின்றனர். இதேவேளை இன்று ஊடக சுதந்திரம் இல்லை என்று சர்வதேச ஊடகவியலாளர்களை சில அரச சார்பற்ற நிறுவனங்கள் அழைத்து வந்து ஊடக வியலாளர் மாநாடு நடாத்தி பணம் சம்பாதிக்க முற்பட்டுள்ளனர்.

ஞாயிறு பத்திரிகைகளை ஒருவர் வாசித்துவிட்டு தூக்கத்துக்குச் சென்று மறுநாள் காலையில் எழுந்தால் அரசாங்கம் கவிழ்ந்திருக்கும் என்று எண்ணும் அளவிற்கு செய்திகள் பிரசுரமாகின்றன. இது ஊடக சுதந்திரம் இல்லையா?

ஜனாதிபதியை மனநோயாளி என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியதை சிங்கள நாளிதழ் ஒன்று முன்பக்கத்தில் கொட்டை எழுத்தில் வெளியிட்டிருந்தது. இது ஊடக சுதந்திரம் இல்லையா?

ஊடக வியலாளர் சிவராம் கொல்லப்பட்டார். இவர் தமிழ் நெற் இணையத்தளத்தின் செய்தியாளர் என்றபடியால் அவர் மாத்திரம் பேசப்படுகிறார். றிச்சட் டி சொய்சா கொலை செய்யப்பட்டார். அது குறித்து ஆராய தெரிவுக்குழு நியமிக்கப்படவேண்டும் என்று அப்போது ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சியைக் கோரியபோது அது அடியோடு மறுக்கப்பட்டது.

அரசியல்வாதிகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களைக் கொன்றவர்கள் யார் என்பது இன்று வரை கண்டறியப்படவில்லை. கொழும்பில் முஸ்லிம் வர்த்தகர்கள் சிலரிடம் கப்பம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து ஜனாதிபதியின் கவனம் திரும்பியுள்ளது. எந்த இனத்தைச் சேர்த்தவரிடம் இருந்து கப்பம் பெறப்பட்டபோதும் அதை அனுமதிக்கமுடியாது.

நாட்டில் வாமும் மூவின மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார். எனவே அரசின் மீது வீண்பழி சுமத்தாதீர்கள் என்றார். (ந-5)

# பிரித்தானிய பிரதமராக இன்று கோர்டன் பிறவுண் பதவியேற்கிறார்

(லண்டன்)

இங்கிலாந்து தொழில் கட்சியின் தலைவராக கோர்டன் பிறவுண் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இந் நிகழ்வில் கலந்து கொண்ட தொழில் கட்சியின் முன்னாள் தலைவரும் இன்று பிரதமர் பதவியிலிருந்து விலக இருப்பவருமான றொனி பிளேயர் பிரதமர் பதவிக்குரிய சகல தகுதிக்ளுமுடைய ஒருவராக கோர்டன் பிறவுண் விளங்குகிறார் எனத் தெரிவித்தார்.

எமது கட்சியின் தலைவராக கடமைப் பொறுப்பேற்றுள்ள கோர்டன் பிறவுண் கடந்த 20 வருட காலத்திற்கு மேலாக எனது நண்பராக உள்ளார்.

இந்த நாட்டின் தலைவராகவும் அவர் கடமைப் பொறுப்பேற்கவுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் என றொனி பிளேயர் மேலும் தெரிவித்தார்.

தொழில் கட்சித் தலைவர் பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட கோல்டன் பிறவுண் உரையாற்றுகையில், தான் தனது கட்சியை வழி நடத்தவும் நாட்டில் அனுகூலமாற்றங்களை ஏற்படுத்தவும் பெரும் பொறுப்புணர்வுடன் செயற்படவுள்ளதாக தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் என்ற வகையில் நான் மேலும் பல கொள்கைகளை வகுப்பதற்கு அப்பால் ஆத்ம ரீதியான அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியம் எனக்கருதுகிறேன்.

என்னால் வழிநடத்தப்படும் புதிய அரசாங்கத்திற்கு உரித்துடையவர்கள் மக்களாகிய நீங்களே. நான் உங்களுக்காக சிரமப்பட்டு உழைப்பேன். நான் என்னால் நிறைவேற்றக்கூடிய உச்ச பட்ச செயல் நிறைவேற்றம் குறித்து கவனமெடுப்பேன். நான் உங்களுக்கு சேவை செய்ய தயாராகி விட்டேன் என்று கோர்டன் புறவுண் மேலும் தெரிவித்தார். (ந-5)

# சான்றிதழ் வழங்குதல்

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் பண்டார நாயக்கா சர்வதேச மண்டபத்தில் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2002-2004, 2003-2005 கல்வியாண்டுகளில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரியர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட்டது.

அன்றைய தினம் குறித்த டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா சான்றிதழை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ந-5)

# வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு இல்லங்களுக் கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அவர்கள் தலைமை நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பிரதி மாவட்ட செயலர் எம்.விஜயரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-5)

# மூதூர் படுகொலையில் முக்கிய ஆவணம் மாற்றம் அனைத்துலக சட்டவல்லுநர்கள் ஆணையம் அறிக்கை

மூதூர் படுகொலையில் முக்கியமான "சாட்சி ஆவணம்" ஒன்றை அரசாங்கம் மாற்றியுள்ளதாக அனைத்துலக சட்ட வல்லு நர்கள் ஆணையம் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய சட்ட வல்லுநர் மைக்கேல் பிரின்பௌம் அந்த ஆணையத்திடம் மூதூர்படுகொலை தொடர்பாக அறிக்கை ஒன்றை கையளித்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது,

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் உடல்களை பரிசோதனை செய்த அவுஸ்திரேலியாவின் மல்கொல்ம் டொட் அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் 2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட் டோரின் உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

7 பேரின் உடல்களிலிருந்து மொத்தம் 8 துப்பாக்கிக் குண்டுகள் எடுக்கப்பட்டன. அரசாங்க பரிசோதனை நிபுணர் மருத்துவர் வைத்தியரட்ன மற்றும் அவுஸ்திரேலியாவின் டொட் ஆகியோரின் அறிக்கைகளை ஒப்பிடுகையில் 8 துப்பாக்கிக் குண்டுகளில் ஒன்று 5.56 கலிபர் என்று அவுஸ்திரேலிய வல்லுநர் குறிப்பிட்டுள் ளார்.

இதற்கு மாறாக அனைத்துமே 7.62 கலிபர் என்று இலங்கை வல்லுநர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் 5.56 கலிபர் குண்டை கந்தளாய் நீதிமன்றில் மார்ச் 7ஆம் நாள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தாக்கல் செய்த சாட்சி ஆவணங்கள் பட்டியலிலிருந்தும் நீக்கிவிட்டு வேறு ஒரு வகை குண்டை தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் 5.56 கலிபர் குண்டுகளானது எம்-16 வகை ரைபிள்களுக்குரியன இந்த எம்-16 வகை ரைபிள்கள்தான் சிறிலங்கா இராணுவம் மற்றும் கடற்படையில் உள்ள அதிரடிப்படை மற்றும் சிறப்புப் படையணிகளில் பயன்படுத்துவர். இந்த ஆயுதங்கள் மற்றும் குண்டுகள் மற்றவர்களால் திருடப்பட்டோ அல்லது விலைக்கு வாங்கப்பட்டோ இருக்கலாம். 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடக்கத்தில் மூதூரில் எம்-16 ரைபிள் களுடன் தான் கடற்படையின் சிறப் புப் பிரிவினர் இருந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழு அரச சார்பற்ற பணியாளர்கள் 17பேர் படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் முழு அளவிலான விசாரணையை வெளிப் படையாக நடத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

# கடத்தல்காரர்களை கண்டுபிடிப்பது சாத்தியமில்லை அரசாங்கம் கூறுவது ஆரோக்கியமான போக்கு அல்ல

## வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் தெரிவிப்பு

அனைத்துலகத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதிக்கு அண்மையில் ஓய்வுபெற்ற வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜி.எஸ்.பாலிஹக்கார ஆலோசனை வழங்கியுள்ளார். கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் கூறியிருப்பதாவது,

அனைத்துலகத்தினுடனான தவறான புரிதல்கள்தான் தற்போதைய சூழ்நிலைக்கு காரணமாகும். இத்தகைய நிலைமை நீடிக்கும் போது அரசாங்கத்துக்கு அந் நாடுகள் கடனுதவி அளிக்காது. பயங்கரவாதத்துக்கு எதிரான பதில் நடவடிக்கையும் அரசியல் வழி செயற்பாடுகளும் சமநிலையில் எடுத்துச் செல்லப்படவேண்டும்.

மாறாக வேகமாக எதிர்வினையாற்றினால் நமக்கு சிக்கல்தான் வரும். நமது பிரச்சினையின் அடித்தளமே வெளிநாட்டவர்கள்தான். அவர்களுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுக்களை நடத்த வேண்டுமே தவிர விலகிச் செல்லக்கூடாது. இராணுவ நடவடிக்கைகள் தேவையெனில் அது தொடர்பில் எதுவித கேள்வியுமே தேவையில்லை. அதே நேரத்தில் இணையாக அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பணத்துக்காகவும் அரசியல் இலாபங்களுக்காகவும் கடத்தல் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்கிற வகையில் இவை தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் உள்ளது. காணாமல் போனோரை கண்டுபிடிப் பதற்கான சாத்தியம் இல்லை என்று மக்கள் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் கூறுவதானது ஆரோக்கியமான போக்கு அல்ல என்றார் பாலிஹக்கார. (அ-5)

# குடிப்பழக்கத்தை நிறுத்த புதிய வைரஸ் கிருமி

குடி குடியை கெடுக்கும் என்று தெரிந்தும் சிலர் குடிக்கிறார்கள். சிலர் குடிப்பழக்கத்தை கைவிட நினைத்தாலும் அவர்களால் அதை விட முடிவதில்லை. அவர்களுக்கு பல்வேறு மருத்துவ சிகிச்சைகள், நல்லொழுக்க பயிற்சிகள் அளித்தாலும் முழு பலனை கொடுப்பது இல்லை.

இந்த குறையைபோக்கும் வகையில் அமெரிக்காவின் நியூயோர்க்கை சேர்ந்த டாக்டர்கள் புதிய சிகிச்சை முறையை கண்டு பிடித்துள்ளனர். "அடினோ வைரஸ்" என்ற ஒருவித வைரஸ் கிருமியை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த வைரஸ் கிருமிகளை ஊசி மூலம் குடிகாரர்களின் உடலில் செலுத்தலாம். இந்த வைரஸ் கிருமி செலுத்தப்பட்டவர்கள் ஒரு மாதம்வரை குடிக்கும் வாய்ப்பு இல்லை.

குடிக்க வேண்டும் என்ற ஆசையை இந்த வைரஸ் கிருமிகள் அழித்து விடுகிறது. உடலில் இதற்கான உயிரியல் மாற்றங்களையும் அது ஏற்படுத்துகிறது. முதல் கட்டமாக எலிகளுக்கு இந்த வைரஸ் கிருமிகளை செலுத்தி வெற்றி கண்டிருக்கிறார்கள். (அ-5)

# இன்று ஒரு தகவல்

## மூன்று வகை மனிதர்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

இதிலே (Ahitude, Skill) போன்ற திறமைகள் அடங்காது. அதெல்லாம் தனி. அதை யார் நினைத்தாலும் முறையான பயிற்சிகள் மூலமாக வளர்த்துக் கொள்ளலாம்.

முன்னர் சொன்னது மாதிரி நாம் எந்த வகையான ஆசாமி என்பதைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்த மாதிரி ஒரு வேலையைத் தேடிக்கொண்டால் வாழ்க்கை நல்லவிதமாக அமையும்.

நான் இந்த உலகத்துக்குத் தேவை இல்லை என்று சொல்ல வேண்டிய அவசியம் வராது. கணக்காளர் வேலைக்கு நேர்முகத் தேர்வு நடந்தது. ஒருத்தர் வந்தார். அவரிடம் 8X3 என்ன என்று கேட்டார்கள் அவர் 23 என்றார் சரி, போ என்று சொல்லிவிட்டார்கள்.

இவர் வெளியிலே வந்ததும் யோசனை பண்ணினார். அடடா 8X3 என்ன என்று கேட்டதற்கு 24 என்று சொல்வதற்குப் பதிலாக 23 என்று சொல்லி விட்டோமே... நமக்கு நிச்சயமாக இந்த வேலை கிடைக்காது என்று நினைத்துக் கொண்டார்.

பத்து நாட்களிலே அவருக்கு நியமனக் கடிதம் வந்தது. வேலையிலே உடனே சேர்ந்து கொள்ளச் சொல்லி. சரி ஏதோ தப்பு நடந்துவிட்டது... நாம் இதை வெளியே சொல்ல வேண்டாம்... என்று நினைத்துக் கொண்டு இவரும் வேலையில் சேர்ந்து கொண்டார்.

ரெம்பநாள் கழித்து வேலை நிரந்தரமானதும் மெதுவாக மனேஜரிடம் உண்மையைச் சொன்னார். "சரி... இன்டர் வியூலிலே 8X3 என்னவென்று கேட்டீர்கள்.. நான் 23 என்று தப்பாகச் சொல்லிவிட்டேன்" என்றார்.

அப்பொழுது மனேஜர் சொன்னார் அன்று இன்டர்வியு வந்த எல்லோரிடமும் 8X3 என்ன என்று தான் கேட்டோம். நீங்கள் சொன்னது தான் (Nearest Correct Answer) கிட்டத்தட்ட சரியாகச் சொன்ன ஒருவர் நீங்கள் தான் அதனாலே தான் உங்களுக்கு இந்த வேலை கிடைத்தது! என்றார்.

## அரசியின் பரிசு

ஒரு பெரிய பியானோ கலைஞர் வியன்னாவிலே இருந்தார். மிகவும் புகழ்பெற்ற இசைக் கலைஞர் அவர்.

இங்கிலாந்து மகாராணி விக்டோரியா அவருடைய சங்கீதத்தைக் கேட்க வேண்டுமென ஆசைப்பட்டார். அவரை அரண்மனைக்கு வரவழைத்து பியானோ வாசிக்கச் சொல்லிக்கேட்டார்.

இவரும் பிரமாதமாக வாசித்தார். மகாராணி அவரைப் பாராட்டி பரிசுகள் கொடுத்துக் கௌரவித்தார். இவருடைய இசையைக் கேட்பதிலே அரசிக்கு மிகவும் ஆர்வம் உண்டு. அதனாலே அதன் பிறகும் அந்தக் கலைஞர் அடிக்கடி அரண்மனைக்கு வந்து வாசிப்பதுண்டு.

ஒருநாள் மகாராணி அவரைப் பார்த்து "உங்கள் நாட்டு தேசிய கீதத்தைப் பாடுங்கள்" என்று கேட்டாராம். உடனே அவர் தனது நாடான ஆஸ்திரியாவின் தேசிய கீதத்தைப் பாட ஆரம்பித்தார்.

அவர் பாட ஆரம்பித்தவுடனேயே மகாராணி எழுந்து நின்றாராம். அதற்கு மரியாதை செலுத்தும் நோக்கத்தோடு பாட்டு முடிகிறவரை அப்படியே நின்று கொண்டிருந்தாராம்.

அந்த முதிய கலைஞரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதன் பின் அந்தப் பியானோக் கலைஞர் ஒரு நாள் தன்னுடைய நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவர் சொன்னாராம்.

"மகாராணியார் எனக்கு எவ்வளவோ பரிசுகள் கொடுத்திருக்கிறார்கள் ஒருமுறை எனக்கு வைரக்கல் பதிந்த அணி ஒன்றையே பரிசாகக் கொடுத்தார். ஆனால்... அதை விட உயர்ந்த, விலைமதிக்க முடியாத அணி எது தெரியுமா?

எனது நாட்டுத் தேசிய கீதத்தை நான் பாடும்போது அவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்களே! அதுதான் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு என்றாராம்.

எனக்குத் தெரிந்த சங்கீத வித்துவான் ஒருத்தர் இருக்கிறார் சமீபத்திலே ஒருநாள் அவரைப் பார்த்தேன். "எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது உங்கள் தொழில்?" என்று கேட்டேன்.

"ரெம்பவும் வித்தியாசமாகப் போய்க்கொண்டிருக்கிறது" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்றேன்

"முன்பெல்லாம் நான் பாடினால்... எதிரிலே இருக்கிறவர்கள்தான் எழுந்து போவார்கள்... இப்பொழுது என்ன நடக்கிறது என்றால் நான் பாட ஆரம்பித்தால் உடனே பக்கவாத்தியக் காரர்களே எழுந்து போய் விடுகிறார்கள்..." என்றாரே அவர்.!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கல்வியமைச்சின் மேலதிக செயலர் மாற்றம்

கல்வியமைச்சின் கல்விச் சேவைகள் ஸ்தாபனத்தின் மேலதிக செயலாளராகக் கடமையாற்றிய எஸ்.தில்லை நடராஜா அமைச்சினால் நீதி நிர்வாக சேவைகளின் மேலதிக செயலாளராக மாற்றப்பட்டுள்ளார். (அ)

## ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் 30ஆம் திகதி சனிக்கிழமை போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

இந்நிகழ்வில் "பகவானின் தரிசனம்" எனும் பொருளில் வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (அ)

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 21ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் முதலாந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் (நீதி மன்றம் அருகில் -கரவெட்டி) கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவதோடு, கழக நலன் விரும்பி ஒருவரால் கணனித் தொகுதி ஒன்று அன்பளிப்பு செய்யப்படவுள்ளதாகவும் இக்கூட்டத்தில் கழகப் பழைய மாணவர்களையும், உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் கழகச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## மணிவிழாவும் கலாவதி வெளியீடும்

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவ மன்றம் எடுக்கும் மணிவிழாவும் "கலாவதி" வெளியீடும் இன்று காலை 9.00 மணிக்கு, பலாலி ஆசிரிய கலாசாலையில் மன்றத் தலைவர் க.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இவ்விழாவில் யாழ்.அரச அதிபர் க.கணேஸ் பிரதம விருந்தினராகவும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## இராசிபலன்

*27.06.2007*
*(ஆனி 13, புதன்கிழமை)*
*துவாதசி பிற்பகல் 05.13 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 01.20 மணிவரை*
*இராகுகாலம் 11.55- 01.25 மணிவரை*
*சுபநேரம் 04.25-05.55 மணிவரை*
*சித்தாமிர்தம்*
*பிரதோஷ விரதம்*

**மேடம்:-** கலகம், வாகனபயம், போசன சுகம், காரிய தடங்கல்.

**இடபம்:-** அபூர்வ சந்திப்பு, பண வருவாய், திடீர் பயணம், காரிய அனுகூலம்.

**மிதுனம்:-** சுகவாழ்வு, பகைவர் விலகுவர் ,நல்ல வருவாய், முயற்சி பலிதம்.

**கடகம்:-** வியாபார மேன்மை, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், பணக்குறைவு.

**சிங்கம்:-** கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, பயந்த சுபாவம், ரோக நிலை.

**கன்னி:-** கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை.

**துலாம்:-** மதிப்புக்குறைவு, பித்த ரோகம், விவாதம், மாதர் நட்பு.

**விருச்சிகம்:-** ஆழ்ந்தசிந்தை, வெகுமானம், புதிய முயற்சி, போசனசுகம்.

**தனுசு:-** கோபப்படுதல், திடீர் பயணம், எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு.

**மகரம்:-** தொழில் சிந்தை, மன மகிழ்ச்சி, கீர்த்தி, பண வரு வாய்.

**கும்பம்:-** சுபநிகழ்வு, கடின உழைப்பு, பிறருக்கு உதவி, போசன சுகம்.

**மீனம்:-** கட்டுப்பாடு, வயிற்று வலி, பயணம், பிதாசிந்தை.

-வளவன்

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**பன்னிரெண்டாம் திருவிழா**

### சொற்பதங் கடந்த சோதி

தொண்டுசெய் அன்பர் வாழத்
துணைபுரி தேவி நீயே
மண்டலத் தெங்கும் உன்போல்
மற்றொரு தெய்வ முண்டோ
கண்டவர் உள்ள மெல்லாங்
களிப்புற வருள்செய் வாய் நீ
தொண்டர்க்குத் தொண்டு மானாய்
சொற்பதங் கடந்த சோதி

நயினை சைவப்புலவர் நா.விசுவலிங்கம்

### காப்பதுன் கடமை யன்றோ

அண்டங்கள் எல்லாம் ஆக்கி
அழகுக்கும் வேர் தான் ஆகி
நின்றவன் அன்பில் நெஞ்ச
நேயத்தில் நிறைந்த செல்வி
தொன்மைசேர் நயினை தன்னில்
அருளொளி பரப்பும் நாக
நன்னகை அணிந்த தேவி
காப்பதுன் கடமை யன்றோ

கவிமணி கந்தமுருகேச தாசனார்

### அமைதியினைத் தருவாயம்மா !

கடல் தாண்டிக் கழல்வேண்டி வந்தோமம்மா
கருணைபொழி விழிகளினைக் காட்டாயம்மா
இடரோடு எம்மினமே எந்தநாளும்
ஏதிலியாய்த் தவிக்கின்ற நிலையைப்போக்க
விடமிருந்த அரவேத்தும் வித்தகியே
வேண்டுவரம் அளித்திடுவாய் உத்தமியே
படமுடியா தினித்துன்பம் நயினைத் தாயே
பார்வையினால்அமைதியினைத் தருவாயம்மா!

கவிஞர் நயினை இராகுலன்

### வலம்புரி நாதமிடும்

சங்குநாதம் பொங்கி எழும்
சங்கத்தமிழ் பாவில் எழும்
வங்கக்கடல் அலையில்
வலம்புரி நாதமிடும்
அங்கம் சிலிர்த்து எழும்
ஆரோகரா பண் எழும்
சிங்காரத் தமிழ் பெண்ணே
ஸ்ரீ நாக பூசணி அம்மாளே

சத்திய பாலா அல்லைப்பிட்டி

### நாகபூசணி அம்மையே காப்பாய் நீயே !

எந்தவொரு இடரதுதா னுற்றிட்டாலும்
எழிலாகும் நின்கோயில் வந்திருக்க
வந்தகுறை தீர்த்திடு நல் லெண்ணங் கொண்டே
வாகாகக் குறைதீர்க்கும் வண்ணத் தாலே
சந்ததமும் தேவரொடு முனிவர் மண்ணோர்
சார்ந்துவழி பாடியற்றும் தன்மை பூண்ட
கந்தமுறு நயினையம் பதியில் வைகும்
நாகபூசணி அம்மையே காப்பாய் நீயே!

மு.தணிகாசலம், கற்கோவளம்

### பார் உறங்கிப் போகாதே !

கார் உறங்கும் மலைகளிலே
கழனி எங்கும் நெல்லுறங்கும்
நீர் உறங்கும் குளங்களில்
நின்று உறங்கும் தாமரைப்பூ
பார் உறங்கிப் போகாமல்
பார்த்து அருளும் நாகபூசணியே!
சீர் உறங்கும் பாதமதைச்
செயல் ஒடுங்கி வணங்குகிறேன்

கவிஞர் சே.பரமநாதன், தாவடி

### துன்பம் அகன்றிட அருள்புரிவாய்

நாற்புறமும் கடல் சூழ்ந்த நயினைப் பதியினிலே
நாகப் படத்தின் கீழ் நடனமாடும் சுந்தரியே
நால் பத்து ஆண்டுகளாய் நாம் படும் துன்பம்
நாலே நாட்களில் அகன்றிட அருள்புரிவாய்

அ.சரண், வட்டுக்கோட்டை

# தாங்கள் வைத்தபொறியில் இராணுவம் சிக்கிக்கொள்ளும்

## சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)

தென் தமிழீழத்தின் 'நாம் வைத்த பொறியிலேயே நாம் சிக்கிக்கொண்டோம்' என்பதனை சிங்கள இராணுவம் விரைவில் புரிந்து கொள்ளும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.



தமிழ் நெட் இணையத்தளத்துக்கு சு.ப. தமிழ்ச் செல்வன் நேற்றுமுன்தினம் அளித்துள்ள நேர்காணலில், இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்படவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் இணைத்தலைமை நாடுகள் கூடி விவாதித்தமையை நாம் வரவேற்கின்றோம்.

இராணுவ வழித்தீர்வில் பயனேதும் இல்லை என்பதால் இரு தரப்பும் பேச்சு மேசைக்குத் திரும்பவேண்டும் என்பதில் அனைத்துலகம் உறுதியாக உள்ளது. இதனை நாம் வரவேற்கும் அதே நேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர எதுவித உறுதியான நடவடிக்கைகளையும் அனைத்துலகம் மேற்கொள்ளவில்லை என்ற தமிழ் மக்களின் கவலையையும் நாம் சுட்டிக்காட்டுகிறோம்.

குறிப்பாக இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை, கொடூரமான மனித உரிமை மீறல்கள், பாரிய மனித அவலங்கள் ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டுவர எதுவுமே செய்யப்படவில்லை. இணைத்தலைமை நாடுகள் கூட ஏன் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியவில்லை என்ற சந்தேகம் தமிழ் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளது? சில நாடுகள் அரசியல் வழித்தீர்வுக்காக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் போது ஏன் சில நாடுகள் மறைமுகமாக அரசாங்கத்துக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளைச் செய்கிறது? என்பது தமிழ் மக்களுக்கு புரியாத புதிராக உள்ளது.

கடந்த 20 ஆண்டுகால உக்கிரமான ஒரு போரிலிருந்து தற்காலிகமான அமைதியை உருவாக்க யுத்தநிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. நீண்ட காலத்திற்குப் பின்னர் அனைத்துலக உதவியுடன் உருவாக்கப்பட்ட முதலாவது யுத்த நிறுத்த ஒப்பந்தம். அனைத்துலகமும் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தன.

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு இந்த ஒப்பந்தம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. இருப்பினும் சிங்கள ஆளும் வர்க்கத்தினரது அதிகாரப்போட்டிகளினால் அமைதிக்காக உருவாக்கப்பட்ட ஏதுவான ஒரு சூழ்நிலை சிதைக்கப்பட்டது. தங்களது நடவடிக்கைகளால் பெரும்பான்மை சிங்கள மக்களிடத்து குழப்பமான நிலையை உருவாக்கியதுடன் இலங்கைத் தீவை ஒரு கொடூரமான நிலைக்கு தள்ளி இருக்கின்றனர்.

தமிழ் மக்கள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்னும் முதலாவது முன்மொழிவை அவர்கள் நிராகரித்தனர். அனைத்துலகத்தினால் முன்மொழியப்பட்ட இரு தரபபினராலும் கைச்சாத்திடப்பட்ட ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பையும் நிராகரித்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நிர்மூலமாக்கினர்.

இத்தகைய சிங்களப் பேரினவாத தலைமையின் நடவடிக்கைகளால் தமிழ் மக்களின் எல்லாவித நம்பிக்கையும் அழிக்கப்பட்டது. சிங்களப் பேரினவாதத்தின் இனப்பாகுபாட்டு செயற்பாடுகளையும் தமிழ் மக்களின் நீண்ட வரலாறு கொண்ட போராட்டத்தையும் அவசியமாக ஆழமாக அனைத்துலகம் ஆராயவேண்டும்.

அனைத்துலகமானது உறுதியான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதுடன் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை ஆதரித்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். தென்னிலங்கை அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையிலும் தங்களது கட்சியின் கொள்கைகளை அவர்கள் எப்போதும் பின்பற்றுவதில்லை.

அதிகாரத்துக்காகவும் பணத்திற்காகவும் ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு தாவிக்கொண்டுதான் இருக்கின்றனர். தென்னிலங்கை கட்சிகளின் ஒருமித்த நிலைப்பாட்டுக்கான முயற்சிகள் என்பதும் ஒரு நாடகம் தான். இத்தகைய முயற்சிகள் மூலம் ஒரு போதும் தீர்வுகாணப்படமுடியாது. தற்போதும் கூட அத்தகைய ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் பொதுவான ஒரு நிலைப்பாட்டிற்கு வர இயலவில்லை.

ஒரு தீர்மானம் எடுத்தாலும் அதன் பின்னர் இந்தக் கட்சிகள் ஒத்துழைக்கப்போதுமில்லை. ஒப்பந்தங்களுக்கும் தீர்மானங்களுக்கும் அதிகாரத்தில் இருக்கின்றபோதானவை தான்.

அனைத்துலகத்திற்காக மிகவும் வளைந்து கொடுத்து விட்டதாகவும் அரசு எப்போதுமே இராணுவ வழித் தீர்வில் தான் அக்கறை உள்ளதாகவும் புதிதாக பேசுகின்றனர்.

இது எப்போதுமே உள்ளதுதான். தனது இராணுவத்தை வலுப்படுத்திய பின்னர் அரசாங்கம் ஒருபோதும் அமைதிப் பேச்சுக்களுக்கு ஒப்புக்கொள்ளாது. மாறாக அமைதி முயற்சிகளையும் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களையும் நிராகரித்து விட்டு இராணுவ வழித்தீர்வு காணப்போவதாகக்கூறி போரில்தான் குதிக்கும்.

போர்க்களத்தில் பாரிய இழப்புக்களைச் சந்தித்த பின்னர் வேறு வழி இன்றி பேச்சுக்களுக்கு ஒப்புக்கொள்ளும். சிங்கள அரசாங்கங்களின் இத்தகைய போக்குக்களை அனைத்துலகம் புரிந்துகொள்ளவேண்டும். தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தமானது தீர்வைத்தரும் எனில் இராணுவம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு சிங்கள அரசாங்கம் முகம் கொடுக்கவேண்டும்.

வரலாற்றில் அரசாங்கம் அமைதிப்பேச்சுக்களுக்கோ அமைதி முயற்சிகளுக்கோ எப்போதும் ஒப்புக்கொண்டதில்லை. கடந்த 60 ஆண்டுகாலமாக தமிழ் மக்கள் தங்களது உரிமைக்காகப் போராடி வருகின்றனர். தங்களது விடுதலைப் போராட்டத்திற்காக தமிழ் மக்கள் இராணுவ வழியைத் தெரிவு செய்யவில்லை.

30 ஆண்டுகாலமாக தமிழர்கள் அமைதி வழியில் போராடினர். சிங்களத் தலைமையானது இந்த 30 ஆண்டுகளிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் திறந்த மனதுடன் மனிதாபிமானமான கண்ணோட்டத்துடன் சிங்களத் தலைமையானது இந்தப்பிரச்சினையை அணுகவில்லை. மாறாக இனப்படுகொலை-இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையையே மேற்கொண்டு வருகிறது.

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுதங்களது தாயகப்பூமியிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இதனால் பாரிய மனித அவலம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதுவே எமது விடுதலைப் போராட்டம் பிறப்பதற்குமான சூழலை உருவாக்கியது.

எப்போது தங்களது அமைதி வழியிலான-ஜனநாயக ரீதியிலான போராட்டம் உடைந்து நொருங்கியதோ-இராணுவ வன்முறையால் தமிழ் மக்கள் துரத்தியடிக்கப்பட்டனரோ அப்போது தங்களது தற்காப்புக்காக ஆயுதங்களை கைகளில் எடுத்தனர்.

தமிழீழ மக்களால் இந்தச்சூழ்நிலை உருவாக்கப்படவில்லை. சிங்கள வன்முறைகளால்தான் இச் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. அனைத்துலகத்தின் பார்வையை தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் ஈர்த்திருக்கின்றது எனின் தமிழ் மக்களின் அர்ப்பணிப்பு மிக்க இராணுவப் பலத்தினால்தான்.

ஆகையால் தமிழ் மக்கள் தங்களது இராணுப் பலம் மற்றும் தற்காப்பை பலவீனப்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். சிங்களத் தலைமை இதனைப்புரிந்து கொண்டு அனைத்துலகத்திடம் கால அவகாசத்தைப் பெற்று அதனையே சந்தர்ப்பமாக்கிக்கொண்டு தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்குவதும் இனப்படுகொலைகளை மேற்கொள்வதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

தமிழ் மக்களினது இராணுவப் பலமானது சிங்கள தேசத்திற்கோ சிங்கள மக்களுக்கோ எதிரானது அல்ல-தங்களது தாயகத்தை பாதுகாப்பதற்கான தற்காப்பு பலம்தான். தமிழ் மக்களின் அபிலாசைகளை சிங்களத்தலைமை எப்போது புரிந்து கொள்கிறதோ அப்போது தமிழ் மக்கள் தாங்களும் பாதுகாப்பாக, சுதந்திரத்தோடும் சுயமரியாதையோடும் வாழ முடியும் என்கிற சூழல் உருவாகும். இந்தத்தீவும் வன் முறைகளில் இருந்து விடுபடும் அமைதியான பிரதேசமாக மாறும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களது தாயகத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு பல்வேறு நாடுகளில் வாழ்கின்றனர். இந்தத்தீவில் பாதிக்கப்பட்ட தங்களது உறவுகளுக்காக அவர்கள் உதவுகின்றனர்.

தங்கள் உறவுகள் பாதிக்கப்படும் போது உதவ வேண்டுமென்று கருதுவது மனிதாபிமானமும் இயற்கையானதுமாகும். இப்படியாக உதவுவதை பயங்கரவாதத்திற்கு உதவுவது எனக்கூறுவது பாரிய சோகம் தான். தமிழ் மக்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளின் சட்டங்களுக்கு அப்பால் ஒருபோதும் மீறிச்சென்றது இல்லை.

தாங்கள் வாழுகின்ற நாடுகளில் இருந்துகொண்டு அரசியல் அல்லது மனிதாபிமான பணிகளையே செய்து வருகின்றனர். தாங்கள் வாழுகின்ற நாடுகளின் அரசாங்கங்கள், மக்கள் தங்களது அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்பதற்காக செயற்பட்டு வருகின்றனர்.

ஆழிப்பேரலைக்குப் பின்னர் அமைதி முயற்சிகளின் போதும் இனப்படுகொலையால் தங்களது மக்களை இழந்து நின்றபோதும் புலம்பெயர் தமிழ் மக்கள் ஓய்வறியாது தாயக உறவுகளுக்காக பாடுபட்டனர்.

இதனை பயங்கரவாதச் செயல் என்பது தமிழ் மக்களை பாதிப்பது என்பது மட்டுமல்ல-தங்களது இன வன்முறைகளை தொடர்ந்து மேற்கொள்ள சிங்களப் பேரினவாதிகளுக்கு ஊக்கமளிப்பதுமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை ஒருபோதும் தோற்கடிக்க முடியாது. இடம், சூழல், நேரம் என இராணுவ உத்திகளை நாம் கொண்டிருக்கிறோம். குறிப்பாக கிழக்கில் சிங்களப் படைகள் முன்னேறுவதும் எங்களது கடுமையான தாக்குதல்களினால் பாரிய இழப்புக்களைச் சந்தித்து பின்வாங்குவதும் சிங்கள இராணுவத்திற்கு வழமையானதுதான். இதுவே கடந்த கால வரலாறு. எந்த ஒரு மக்களும் தங்களது தாயக நிலப்பரப்பை அந்நியப்படை ஆக்கிரமிப்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

தாங்கள் வைத்த பொறியிலேயே சிக்கிக் கொண்டோம் என்பதை சிங்கள இராணுவம் விரைவில் புரிந்து கொள்ளும் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (ந-5)

தவறிழைத்தவன் மறந்து விடுகிறான். ஆனால் தவறிழைக்கப்பட்டவன் மறப்பதில்லை.

-ஆபிரிக்கா

வலம்புரி

# மக்கள் படும் அவலத்தில் அரசியல் பிழைப்பு நடக்கிறது

இலங்கையின் அரசியல் தலைமைகள் பொறுப்பற்றவையாக மாறி விட்டன. தமது பிழைப்பை மட்டும் மையமாக வைத்து அரசியல் நடத்துவதன் விளைவாக மனித உயிர் அநியாயமாக அழிக்கப்படுவதுடன், கடத்தல், காணாமல் போதல், கைது என பல்வேறு அட்டூழியங்கள் தலைவிரித்தாடுகின்றன.

ஆளும் தரப்பாக இருக்கலாம், அன்றி எதிர்த்தரப்பாக இருக்கலாம், எதுவுமே மக்களின் நலன் பற்றி சிந்தித்ததாக இல்லை.

ஒருவரை ஒருவர் பழி தீர்க்கும் படலமே இலங்கை அரசியலில் நடந்துகொண்டிருக்கின்றது. நீதி, நேர்மை, நியாயம், உண்மை என்ற உயரிய பண்புகளுக்கு அமைவாக செயற்படும் பண்பாடு முற்றுமுழுதாக விடுபட்டு சொந்த நலன், பதவி மோகம், பழி தீர்க்கும் எண்ணம் என்ற குணங்களுக்கிடையில் சிக்குண்டு அரசியல் தலைமைகள் சீர்குலைகின்றன.

வாழவேண்டிய மனித உயிர்கள் அநியாயமாக அழிக்கப்படுகின்றன. அதனால் வாழும் மனிதங்கள் சோகத்தில் மூழ்கி சுகமிழந்து போகின்றன.

இவ்வாறு பெருந்துயர் நீடிக்கின்ற போதிலும் யுத்தமே என்று கொக்கரிக்கும் குணவியல்பு பெருந்தன்மை மிக்க அரசியல் தலைமைகள் நாட்டின் ஆட்சி பீடத்தில் இல்லாமல் போய் விட்டதென்பதை உறுதி செய்கிறது.

அமைச்சுப் பதவி நீக்கப்பட்டதன் காரணமாக ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் அரசைக் கலைக்க வேண்டுமென மங்கள சமரவீர கங்கணம் கட்டுகிறார்.

இத்தனைக்கும் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதில் மங்கள சமரவீரவின் பங்கும் பணியும் முக்கியமானது.

எனினும் தனக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ செயற்படாதவரைக்கும் அவரை ஏற்றுக்கொள்ள மங்கள தயாராக இருந்தார்.

இப்போது மகிந்த தன்னை பதவி நீக்கம் செய்து விட்டார் என்பதால் தனது நலன் பாதிக்கப்பட்டு விட்டது. தனது கௌரவம் பறிபோய் விட்டது என்ற நிலையில் மங்கள அசியல் களமிறங்கி மகிந்தவுக்கு எதிராக போராட ஆரம்பித்து விட்டார்.

பல்லாயிரக் கணக்கான மனிதர்கள் கொல்லப்பட்டபோது, கடத்தப்பட்டபோது அந்த மக்களுக்காக மங்கள சமரவீர குரல் கொடுத்திருப்பாராயின்-இத்துணை தூரம் எழுச்சி கொண்டிருப்பாராயின் நிச்சயம் மக்கள் சமூகமும் மங்கள சமரவீரவை மனித நேயமிக்க மானிடத் தலைவராக ஏற்றிருக்கும். என்ன செய்வது? மங்களவின் மகிந்த எதிர்ப்பும் சொந்த நலன் கருதியதாகிவிட்டது.

இதற்கு மேலாக வெளிப்படையான உண்மையையும் மறைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சோடச உபசாரம் செய்யும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயை நினைத்தால் நெஞ்சம் கலங்கும்.

இப்படியும் ஓர் அமைச்சரா என்ற கேள்வி எல்லாம் இலங்கை மக்களின் தலைவிதி என்று மனம் ஆறிக்கொண்டாலும், அட்டூழிய நோயின் தாக்கம் இலங்கையின் பௌத்த மதத் தலைமைகளிடமும் தொற்றி, முற்றி, உச்சம் கண்டுள்ளதால் மக்களின் அவல வாழ்வில் இன்பம் காணும் ஆட்சியும் அகிம்சை மறந்த மதமும் கொடிபிடித்து கொண்டாடுகின்றன.

# இலங்கை அரசு சிறுபான்மையின மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டும்

## இணைத்தலைமை மாநாட்டில் வலியுறுத்தல்

(கொழும்பு)

இரத்தக் களறியை நீக்கி இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும். இவ்வாறு இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் ஒஸ்லோவில் நடைபெற்ற இம் மாநாட்டிற்கு நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் விசேட சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் அமெரிக்க தெற்காசிய உதவி இராஜாங்க செயலர் றிச்சட் பௌச்சர், ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் உயர் அதிகாரிகள் மற்றும் யப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக உதவி வழங்கும் நாடுகள் தமது நிதியுதவியினை குறைந்த அளவையே வழங்குவது என ஆலோசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து சிறுபான்மையினருக்கு சுயநிர்ணயத்தை வழங்கினாலேயே இலங் கைக்கு முழுமையான நிதியுதவி செய்ய முடியும் என முக்கிய நிபந்தனையை ஐரோப்பிய உயர்அதிகாரி இம் மாநாட்டில் முன்வைத்துள்ளார்.

வன்முறைகளைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு இணைத் தலைமைநாடுகள் இருதரப்பையும் தூண்டுவார்கள் என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் விசேட சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் மனித உரிமைகளை மதிக்க வேண்டும். அவ்வாறு மதித்தால்தான் நிதியுதவி வழங்க முடியும்.

மேற்பட்ட விடயமே நிதியுதவி வழங்கக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் என அமெரிக்கத் தெற்காசிய உதவி இராஜாங்க செயலர் றிச்சட் பௌச்சர் ஏ.எவ்.பி.செய்திச் சேவைக்குத் தொலைபேசியில் தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள், இலங்கையில் மக்களின் பாதுகாப்பையும் அதன் நிமிர்த்தம் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக்கவனித்து வருவதாகத் தெரிவித்துள்ளன. (ந-5)

## புலிகளின் படகுகளில்...

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த வாரம் நடந்த உக்கிர மோதலின் போது கடற்படையால் கைப்பற்றப்பட்டதாக்க் கூறப்படும் விடுதலைப்புலிகளின் கலத்திலிருந்து சக்தி வாய்ந்த ராடர் கைப்பற்றப்பட்டபோது இது தெரியவந்துள்ளது.

அது யப்பானியத் தயாரிப்பு என்று பாதுகாப்புத் தரப்பு அதிகாரி தெரிவித்தார். மேலும் 250 குதிரை வலுத்திறன் கொண்ட 4 யமஹா இயந்திரங்கள் அந்தக் கலத்தில் பொருத்தப்பட்டிருந்தது என்றும் அவை யப்பானியத் தயாரிப்பு என்றும் இத்தகைய இயந்திரங்களை அரசாங்கத்தின் உரிய அனுமதி இல்லாமல் கொண்டு வர முடியாது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

விடுதலைப்புலிகளின் கலம் ஒன்றில் முன்னர் 14.5 எம்.எம்.டிவின் பரெல் ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அவை சீனத் தயாரிப்பு என்பதால் சீன அரசாங்கத்தின் கவனத்திற்கு அது கொண்டு செல்லப்பட்டது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## அச்சுறுத்தல்...

முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசனிடம் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

வாசுகி மற்றும் அவரது கணவர் மகேந்திரன் இருவரும் ஹவ்லொக் வீதியில் வசித்து வந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10.45 மணிக்கு அநாமதேய தொலைபேசி மூலம் 5 மில்லியன் ரூபா தொகையைத் தர வேண்டும் என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அதற்கு முன்னதாக கடந்த 19 ஆம் திகதி மாலை 5.45 மணிக்கு தங்கள் வீட்டை இராணுவத்தினர் சோதனையிட்டதாகவும் மக்கள் கண்காணிப்புக் குழுவிடம் அவர்கள் தெரிவித்தனர்.

இவ் அச்சுறுத்தலைத் தொடர்ந்து தனது குடும்பத்தினருடன் நேற்று இலங்கையை விட்டு அவர் வெளியேறியுள்ளார். (ந-5)

## ரணில்-மங்கள இவ்வாரத்திற்குள்...

தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுடனான பேச்சுவார்த்தையில் எட்டப்படுகின்ற இணக்கப்பாடுகள் முடிபுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை திரும்பவிருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு மங்கள சமரவீரவினால் எடுத்துரைக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சுப் பதவி நீக்கப்பட்ட மங்கள சமரவீரவும் சிறிபதி சூரியாராட்சியும் அரசாங்கத்திற்கு எதிரான பலமான அரசியல்அணி ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் ஜனநாயக அணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று பகிரங்கமாக அறிவித்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராகவிருப்பதாக அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி குருநாகலில் கடந்த 23 ஆம் திகதி நடத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் செயற்பாடுகளை வரவேற்றதுடன் அரசாங்கத்திற்கு எதிரான கூட்டமைப்பு அமைப்பதற்காக ஜனநாயகத்திற்காக போராடுகின்ற அனைவரையும் ஓரணியில் திரட்டப் போவதாகவும் கூட்டமைப்பு அமைத்து அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்தவிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக போராட்டம் நடத்துவதற்கு கூட்டமைப்பு அமைப்பது தொடர்பாக ரணிலும் மங்களவும் பகிரங்கமாக அழைப்பு விடுத்த ஓரிரண்டு வாரத்திற்குள் இந்தச் சந்திப்பு இடம் பெறவிருப்பதனால் அரசாங்கத்திற்கு எதிராகக் கூட்டமைப்பு அமைப்பது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போது முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சியும் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் இங்கிலாந்தில் தங்கியிருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடு திரும்பவிருப்பதாகத் தெரியவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றார்.

இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் மற்றும் கூட்டமைப்பு நிறுவுவது மங்கள சமரவீர விடுத்துள்ள பகிரங்க அழைப்புத் தொடர்பாக ரணிலின் நிலைப்பாடு தொடர்பாகவும் கேட்டறிந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்பிலிருந்து எதிர்த்தரப்புக்கு மாறியதன் பின்னர் ஆற்றிய உரையும் நாட்டில் ஜனநாயகத்தை உருவாக்கும் வகையான அரசாங்கத்தை உருவாக்குவதற்காக ஜனநாயகவாதிகள் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்ததுடன் அரசாங்கத்தின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மக்கள் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆதரவு வழங்குவதுடன் நாட்டின் நலன் கருதி உருவாக்கப்படும் அணிக்குத் தலைமை தாங்க முன்வரவேண்டும் என்றும் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார்.

சந்திரிகாவுடன் ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர, சிறிபதி ஆகியோருடனான பேச்சுவார்த்தையின் முடிபில் அரசாங்கத்திற்கு எதிரான- கூட்டமைப்பு அமைப்பதற்கான இணக்கம் காணப்பட்டால் கூட்டமைப்புக்கு சந்திரிகா தலைமை தாங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சிக்கும்இடையில் இவ்வாரத்திற்குள் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. எனினும் சந்திப்பு நடைபெறும் தினத்தைச் சரியாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

இந்த அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை ஐக்கியதேசியக் கட்சி மேற்கொண்டுள்ளது. அந்த செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து கிடைக்கின்ற ஆதரவுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இந்நிலையில் அரசாங்கத்திற்கு ஆதரவான கட்சிகள் இணைந்து கூட்டமைப்பு அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படு கின்றன என்றார். (ந-5)

## சர்வகட்சி...

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் றிச்சட் பௌச்சர், யப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி மற்றும் பிரித் தானிய வெளிவிவகார இணை அமைச்சர் ஹிம் ஹாவல்ஸ் ஆகியோர் தமது சந்திப்பின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு இவ் அழுத்தத்தைக்கொடுத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டிற்கு ஆதரவு வழங்காமைக்காக இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் மீது தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினையை தேசிய பிரச்சினையாகக் கருதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். இதனிடையே இனப்பிரச்சினை தீர்வில் எதிர்க்கட்சித் தலைவரின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனவும் அவரின் நடவடிக்கைகளால் நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (ந-5)

## சி.டி.எம்.ஏ...

பொறுப்பதிகாரியிடம் கையொப்பம் பெற்று படிவத்தை ஒப்படைத்தால் மட்டுமே இணைப்பு வழங்கப்படும் என ரெலிக்கொம் வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது.

எனினும் முதல் தடவையாக நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள், மோட்றோலர் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் எனவும் பின்னரே ஏனையோருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## கிளிநொச்சி...

மணியளவில் மீட்டனர். இராணுவத்தின் விசேட பிரிவினர் வரவழைக்கப்பட்டு குண்டு செயலிழக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பொரல்லைப் பொலிஸார் நடத்தி விசாரணையின் பின்னர் வாகனச் சாரதி உட்பட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)


ஜெஸ்வின் & பருத்தித்துறைப் பங்கு கணினிப் பயிற்சியகம்
பங்குப் பணிமனை – புனிததோமையார் ஆலயம் பருத்தித்துறை

புதிய பிரிவுகள் ஆரம்பம்

80% விசேட கழிவுடன்

(Course Duration 3 Month)

- MS Office
- Desktop Publishing
- Video Mixing
- Hardware
- Web Design
- IT
- Accounting Pakage
- Internet & E-mail

1ம் பிரிவு 01-07-2007 10.00 மணிக்கு பதிவுகள் மேற்கொள்ளப்படும்
2ம் பிரிவு 10-07-2007 10.00 மணிக்கு பதிவுகள் மேற்கொள்ளப்படும்
3ம் பிரிவு 15-07-2007 11.00 மணிக்கு பதிவுகள் மேற்கொள்ளப்படும்

எமது பயிற்சியகத்தில் பயிற்சி முடித்தவர்களுக்கு விசேட தொழில் துறைப் பயிற்சி வழங்கி தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பயிற்சியின் முடிவில் அதிவிசேட சித்தி எய்தவர்களுக்கு P2, P3 கணினி இலவசமாக வழங்கப்படும்.

சுனாமி, தாய் தந்தையிழந்தோர், வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வோர் அந்தந்தப் பகுதி பங்குத்தந்தை அல்லது கிராம சேவகரின் சிபார்சுடன் வருமிடத்து திட்ட அடிப்படையில் இலவசக் கணினிப் பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

(c-195)



BOC மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 30.04.2006 ற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
| --- | --- |
| யாழ்.மேற்தரக் கிளை<br>யாழ்.2ம் மேற்தரக் கிளை<br>திருநெல்வேலி<br>ஊர்காவற்றுறை<br>காரைநகர்<br>மானிப்பாய்<br>சுன்னாகம்<br>(அச்சுவேலி விரிவாக்கற் கிளை உட்பட)<br>காங்கேசன்துறை<br>நெல்லியடி<br>பருத்தித்துறை<br>சாவகச்சேரி | யாழ்.மேற்தரக் கிளை யாழ்ப்பாணம் 2007 யூலை மாதம் 7ம் 8ம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை ஒன்றிணைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

26.06.2007

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி (வட பிராந்தியம்),
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3126
021 222 2735

(c-196)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.